அனுப்புநர்

நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–600 005.

பெறுநர்

நகராட்சி ஆணையர்,
கடலூர்/திருவாரூர்/சீர்காழி/ஸ்ரீவில்லிபுத்தூர்/
குன்னூர்/காரைக்குடி/பொள்ளாச்சி/திருமங்கலம்/
பெரியகுளம்/மன்னார்குடி/நாகர்கோயில்/தென்காசி/
தாராபுரம்/பரமக்குடி/திருப்பத்தூர்/சங்கரன்கோவில்/
மேலூர்/திருச்செங்கோடு/ராஜபாளையம்/தாம்பரம்/வேலூர்/கோபிச்செட்டிபாளையம்/ஒசூர்/செங்கோட்டை/புதுக்கோட்டை/ஆவடி/பண்ருட்டி/திருவள்ளூர்/கரூர்/கம்பம்/
ஆத்தூர்/தேனி அல்லிநகரம்/பத்மநாபபுரம்/ஆரணி/
கொடைக்கால்/வாலாஜாபேட்டை/குளித்தலை/
கடையநல்லூர்/சின்னனூர்/திருவண்ணாமலை/எடப்பாடி/
தருமபுரி/உசிலம்பட்டி/நெல்லிக்குப்பம்/சிதம்பரம்/
மணப்பாறை/காஞ்சிபுரம்/ராசிபுரம்/அருப்புக்கோட்டை/
போடிநாயக்கனூர்/மேட்டுப்பாளையம்/விழுப்புரம்/
பல்லவபுரம்/நாமக்கல்/பட்டுக்கோட்டை/சத்தியமங்கலம்/
திருத்துறைப்பூண்டி/துறையூர்/நாகப்பட்டினம்/
மயிலாடுதுறை/கோவில்பட்டி/தேவகோட்டை/அறந்தாங்கி/
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருநெல்வேலி.

ந.க.எண்.651/2018/உ.வ

நாள்: 17.04.2018

ஐயா/அம்மையீர்,

பொருள்: நிர்வாகம் – தகவல் தொழில் நுட்பப்பணி – உதவி திட்ட அமைப்பாளர்கள் – 01.01.2016 முதல் புதிய ஊதியக்குழு பரிந்துரைகள் – ஊதிய நிர்ணயம் செய்தது – முதியவர்–இளையவர் இடையேயான ஊதிய முரண்பாடுகள் – ஊதிய முரண்பாடுகள் களைதல் குறித்து.

பார்வை: 1. தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை தகவல் தொழில் நுட்பப்பணியாளர்கள் சங்கம் முறையீடு கடிதம் நாள்.14.12.2017.
2. அரசாணை எண்.303 நிதி (ஊகு) துறை நாள்.11.10.2017.
3. இவ்வலுவலக கடித எண். இதே நாள்.08.02.2018.

*****

பார்வை 1–ல் காணும் விண்ணப்பத்தில், அறந்தாங்கி நகராட்சியில் உதவி திட்ட அமைப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.பி.வீரமணி, 10.01.2000 அன்று பணியில் சேர்ந்துள்ளார் எனவும், அவருக்கு முன்பாக 24.06.1999 முதல் 29.09.1999 முடிய உள்ள காலங்களில் பணியில் சேர்ந்துள்ள சுமார் 70 உதவி திட்ட அமைப்பாளர்களின் ஊதிய நிர்ணயம் 01.01.2016 அன்று புதிய ஊதிய திருத்தத்தின் படி மேற்படி திரு.பி.வீரமணி அவர்களை விட குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்து, இந்த ஊதிய முரண்பாட்டை களைந்து இளையவர் திரு.பி.வீரமணி, உதவி திட்ட அமைப்பாளருக்கு 01.01.2016–ல் நிர்ணயிக்கப்பட்ட ரூ.62,800/–க்கு இணையாக பணியில் முதியவர்களாக இருக்கும் உதவி திட்ட அமைப்பாளர்களுக்கு ஊதியம் திருத்தி நிர்ணயம் செய்யப்பட

வேண்டும் என்றும் தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை தகவல் தொழில் நுட்பப்பணியாளர்கள் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

எனவே, முதியோர் மற்றும் பணியில் இளையோர் இடையில் ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாடுகளை களையும் பொருட்டு சம்பந்தப்பட்ட குறித்து உரிய உதவி திட்ட அமைப்பாளர்கள் ஊதிய முரண்பாடு குறித்து விண்ணப்பத்தினை அவர்கள் சம்பந்தப்பட்ட ஊதியக்கட்டு + தர ஊதியம்/. ஊதிய நிலையில் பெற்று வந்த ஊதிய விவரங்களுடன் ஊதிய முரண்பாடு எழுந்த நாள் விவரங்களை குறிப்பிட்டு உரிய ஒப்புநோக்கு படிவத்தில் (Comparative Statement) அந்தந்த நகராட்சியில் சமர்ப்பிக்குமாறும், மேற்படி விண்ணப்பங்களை பார்வை 2–ல் குறிப்பிட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் பரிசீலனை செய்து உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–சு.சாந்தி
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

நகல்:

1. அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
2. தமிழ்நாடு நகராட்சி தகவல் தொழில் நுட்ப அலுவலர் சங்கம்
381/A,வேட்டவலம் ரோடு, திருவண்ணாமலை.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

17.04.18
கண்காணிப்பாளர்

17/4/18